கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து தெளிக்காததால் பயிர் சேதம் அடைந்திருக்கிறதோடு, பணமும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மருந்து தெளிக்கப்படும்.

ஜவ்வாது மலையிலுள்ள வனவிலங்குகள் புகலிடம்

** 121 வினா—திரு. தொ. ப. சீனிவாசன் :* மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைத் தொடரில் அம்மர்தி தங்கும் விடுதி அருகில் சிறிய அளவில் உள்ள வன விலங்குகளின் கண்காட்சியை பெரிய அளவில் மிருகக் காட்சி சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இப்பொழுது தனியார் துறையில் மிருகக் காட்சி சாலை நடைபெறுகிறது. பஸ் போக்குவரத்தும் இருக்கிறது. ஆனால், அந்த சாலை அங்கே சரியாக இல்லாத காரணத்தால், பஸ் போக்குவரத்தும் நல்ல முறையில் இல்லை. ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தனியாக இதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம்.

தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலிருந்து முறையீடு

** 122 வினா—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் திருப்பூரில் இருந்து மின் வாரியத் தலைவருக்கு 1971 ஏப்ரல் மாதத்தில் கோரிக்கைகள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?